8. இயற்கணிதம் 3.7

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. $ax + b = 0$ என்ற சமன்பாட்டின் தீர்வு -------- ஆகும்.

2. a மற்றும் b மிகை முழுக்கள் எனில் $ax = b$ என்ற சமன்பாட்டின் தீர்வு எப்பொழுதும் _____ ஆகும்.

3. ஓர் எண்ணிலிருந்து அதன் ஆறில் ஒரு பங்கைக் கழித்தால் 20 கிடைக்கிறது எனில், அவ்வெண் _____ ஆகும்.

4. ஒரு முக்கோணத்தின் கோணங்கள் 3:4:5 என்ற விகிதத்தில் அமைந்துள்ளது எனில், அம்முக்கோணத்தின் பெரிய கோணத்திற்கும், சிறிய கோணத்திற்கும் உள்ள வித்தியாசம் _____ ஆகும்.

5. $a + b = 32$ என்ற சமன்பாட்டில் a இன் மதிப்பு 14 எனில், b இன் மதிப்பு _____ ஆகும்.

சரியா தவறா எனக் கூறுக.

6. ஓர் எண் மற்றும் அதன் மும்மடங்கு இவற்றின் கூடுதல் 48, இதனை $y + 2y = 48$ என எழுதலாம்.

7. $3(5x + 2) = 2(4x - 5)$ என்பது ஒரு மாறியில் அமைந்த ஒருபடிச் சமன்பாடு ஆகும்.

8. ஓர் எண்ணின் இரண்டில் ஒரு மடங்கு என்பது அந்த எண்ணில் இருந்து 10 ஐக் கழிப்பதற்குச் சமம் எனில், அந்த சமன்பாட்டின் தீர்வு $x = 20$ ஆகும்.

9. சமன்பாட்டின் ஒரு பக்கத்தில் உள்ள ஓர் எண்ணை மற்றொரு பக்கத்திற்குக் கொண்டு செல்வது இடமாற்றுமுறை ஆகும்.

LIVEWORKSHEETS

10. ஒரு மாறியில் அமைந்த ஒருபடிச் சமன்பாடானது, அதனுடைய மாறியின் அடுக்காக 1-ஐக் கொண்டு இருக்கும்.

சரியான விடையைத் தேர்ந்தெடுக்க

11. ஓர் எண் மற்றும் அதன் பாதியின் கூடுதல் 60 எனில் அவ்வெண் _____ ஆகும்.

(அ) 15 (ஆ) 20 (இ) 25 (ஈ) 40

12. ஒரு முக்கோணத்தின் வெளிக்கோணம் 130°, அதன் ஓர் உள்ளெதிர்க் கோணம் 58° எனில், மற்றோர் உள்ளெதிர்க் கோணம் _____ ஆகும்.

(அ) 62° (ஆ) 72° (இ) 78° (ஈ) 68°

13. ஆண்டிற்கு 5% வட்டி வீதத்தில் 2 ஆண்டிற்கு ₹500 ஐத் தனிவட்டியாகத் தரும் அசல் எவ்வளவு?

(அ) 50,000 (ஆ) 30,000 (இ) 10,000 (ஈ) 5,000

14. இரண்டு எண்களின் மீ.சி.ம மற்றும் மீ.பொ.கா ஆகியவற்றின் பெருக்குத் தொகை 24 ஆகும். அவற்றுள் ஓர் எண் 4 எனில், மற்றோர் எண் _____ ஆகும்.

(அ) 6 (ஆ) 2 (இ) 4 (ஈ) 8

15. அடுத்தடுத்த மூன்று எண்களில் மிகச்சிறிய எண் x-1, எனில் மிகப்பெரிய எண் _____ ஆகும்.

(அ) x (ஆ) x+1 (இ) x+2 (ஈ) x–1

LIVEWORKSHEETS